மகேந்திரன் பரியாயா
மாணிக்கபுரம்
விநாயகபுரம்.

நான் மாணிக்கபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தவனாக அமிந்து வருகின்றேன். எனது குடும்பத்தில் நானும் எனது கணவரும் 2 பிள்ளைகளும் உள்ளனர். எனது கணவர் கூலி வேலை செய்து வருகின்றார். இந் நிலையில் இந்த நிறவத்தினால் அறிவிக்கப்படுத்தப்பட்ட அவசரநிலை குடுவில் அங்கத்தவராக இணைந்து என்னால் முடிந்தளவு பணத்தினை சேமித்து வருவது எனக்கு சந்தோசத்தினை அளிக்கின்றது. இக் குடுவில் நீரையை பயன்படுத்தி பெற்றுக் கொண்டேன். அந்த வகையில் வீட்டுத் தோட்டப்பயிர்கள், நல்ல பசுமாட்டு வளர்ப்பு பயிற்சி போன்றன எனது வாழ்வில் மிகவும் பயனுள்ளதாக காணப்பட்டது. பயிற்சியை மையமாக கொண்டு வீட்டுத் தோட்டத்தினை ஆரம்பித்து அன்றாட வீட்டுத் தேவையை பூர்த்தி செய்து வைதோடு எனது குடும்பத்தின் சத்தான நஞ்சற்ற உணவு வகையான காய்கறி வகைகளால் மிகவும் சந்தோசமடைகின்றேன். இந் நிலையில் எனது வருமானத்தினை மேற்கொண்டு நல்ல பசுமாட்டு வளர்ப்புக்கிட்டத்தினை வாடிவாசலாக பெற்றுக் கொண்டு எனது பசுமாட்டிலிருந்து பாலினை விற்பனை செய்து அதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தினை கொண்டு எனது குடும்பத்தின் அன்றாட தேவையை பூர்த்தி செய்து வருகின்றேன். அதுடன் எனது பிள்ளைகள் சத்தான உணவாக பாலினை எடுத்து ஆரோக்கியமாக திகழ்கிறார்கள் என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

இவ் உதவியினை மனமுவந்து செய்த தயாளன் மகளிர் சங்கம் என்பவருக்கு மூலமாக நன்றியினை எனது குடும்பம் சார்பாக தெரிவித்து கொள்வதோடு அவர் நீண்ட காலம் நிம்மதி சந்தோசத்துடன் வாழ எனது கண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு
மகேந்திரன்